# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க,

# இலங்கை அச்சுத்தொழில் நிறுவகச் சட்டம்

---

*[1984, மே மாதம் 2 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1984, மே மாதம் 4 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 | தபாற் செலவு : சதம் 60

## 1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை அச்சுத் தொழில் நிறுவகச் சட்டம்

[1984, மே மாதம் 2 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 14/83
1596

**இலங்கை அச்சுத்தொழில் நிறுவகத்தினைத் தாபிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை அச்சுத்தொழில் நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

### பாகம் I

### இலங்கை அச்சுத்தொழில் நிறுவகத்தைத் தாபித்தலும், அதன் குறிக்கோள்களும், தத்துவங்களும், பணிகளும்

2. (1) (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை அச்சுத்தொழில் நிறுவகம் என அழைக்கப்படவேண்டிய நிறுவகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை அச்சுத்தொழில் நிறுவகத்தைத் தாபித்தல்.

(2) நிறுவகமானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு இடையறு வழியுரிமையும் ஒரு பொது இலச்சினையுங்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய கூட்டிணைப்புப் பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) ஆளுநர் சபை உறுப்பினர்கள் நிறுவகத்தின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

3. நிறுவகத்தின் பிரதான அலுவலகம் கொழும்பில் இருத்தல் வேண்டும்.

நிறுவகத்தின் பிரதான அலுவலகம்.

4. பின்வருவன நிறுவகத்தின் பொதுக் குறிக்கோள்களாதல் வேண்டும் :—

நிறுவகத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) தொழில்நுணுக்கங்கள், செய்முறைகள், மூலப்பொருட் பயன்பாடு, திட்டமிடல் முதலியவற்றைச் சீர்திருத்தும் கருத்துடன் அச்சுத்தொழிலில் தற்போது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களுக்குப் பயிற்சியளித்தலும், அதன்மூலம் இலங்கையில் உள்ள அச்சுத்தொழில் தாபனங்களின் அச்சிடல் தராதரங்களைச் சீர்திருத்தலும் ;

(ஆ) அச்சுத்தொழிலில், தொழினுட்பம் மற்றும் முகாமை ஆகிய துறைகளில் பயிற்சிநெறிகளை ஒழுங்கமைத்தல் ;

ஏ 074257 — 2,650 (03/84)

(இ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் பயிற்சிநெறிகள் தொடர்பாகச் சான்றிதழ்களும் திப்புளோமாக்களும் வழங்குதல் ;

(ஈ) பருவகாலச் செய்திக் கடிதமூலம் அல்லது வேறு வெளியீடுமூலம் புதிய பாடத்திட்டங்கள், தொழில்நுணுக்கங்கள், செய்முறைகள் மற்றும் கிடைக்கக்கூடிய கற்கைநெறிகள் என்பன தொடர்பாக அச்சுத்தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு வசதி ஒழுங்கமைத்தலும் தகவல் பரப்புதலும் ;

(உ) வெளிநாடுகளிலுள்ள அச்சுத்தொழில் பாடசாலைகளில் அல்லது அச்சுத்தொழில் மனைகளில் பயிற்சிக்கு ஆதரவளித்தலும் அத்துடன் பரிமாற்ற முறைமூலம் பயிற்சிக்கு பரஸ்பர மாற்று ஒழுங்கு செய்தலும் ;

(ஊ) இலங்கையில் அச்சுத்தொழிலுக்கு அவசியமான புதிய தொழில் நுணுக்கங்களையும் தகவலையும் பெற்றுக்கொள்ளும் கருத்துடன் அச்சுத்தொழிலுடன் தொடர்புபட்ட வியாபாரக் கண்காட்சிகளுக்குச் செல்லுதலும், அவற்றில் பங்குபற்றுதலும் ;

(எ) இலங்கையில் கிடைக்கக்கூடிய அச்சுத்தொழில் முறைகள் காணப்படாதனவான அயற்புற நாடுகளில் அச்சுத்தொழிலில் ஏற்கனவே தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களுக்குப் பயிற்சி அளித்தல்.

5. நிறுவகமானது அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நியாயமானளவு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும், உரிமைகளையும், பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன் குறிப்பாக அது— *நிறுவகத்தின் தத்துவங்கள்.*

(அ) உள்ளூர் மூலங்களிலிருந்தாயினுஞ்சரி வெளியூர் மூலங்களிலிருந்தாயினுஞ்சரி காசாகவோ, பொருளாகவோ மானியக்கொடைகளையும் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறலாம் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலாம், வைத்திருக்கலாம், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கலாம் அல்லது கொடுக்கலாம், ஈடுவைக்கலாம், அடைவு வைக்கலாம், அத்துடன் விற்கலாம் அல்லது வேறு வகையாக கையுதிர்க்கலாம் ;

(இ) நிறுவகத்தின் குறிக்கோள்களை முழுமையாக அல்லது பகுதியளவில் கொண்டுள்ள அல்லது அவற்றையொத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள, இலங்கையிலுள்ளனவான அல்லது வெளிநாட்டிலுள்ளனவான கல்வி நிறுவனங்களுடன் அல்லது வேறு நிறுவனங்களுடன் ஆளணியினர், மாணவர்கள் ஆகியோரது பரிமாற்றத்திற்காகவும் பொதுவாக அவர்களின் பொதுக் குறிக்கோள்களுக்கு உசிதமானவையாக இருக்கக்கூடிய அத்தகைய நோக்கங்களுக்காகவும் ஒத்துழைப்புக்கான உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம் ;

(ச) நிறுவகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் எந்திர சாதனத்தையும் உபகரணத்தையும் இறக்குமதி செய்யலாம், அத்துடன் நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக உபகரணத்தையும், நிதிகளையும், ஆளணியினரையும் வேறு ஏதேனும் உதவியையும் பெற்றுக்கொள்ளலாம் ;

(ட) பேராசிரியர் பதவிகள், உறுப்பாண்மைகள், ஆராய்ச்சி இணைவர் பதவிகள் ஆகியவற்றை ஏற்படுத்தலாம் என்பதுடன், அடிப்படைக் கற்கைகளுக்காகவும் உயர்நிலைக் கற்கைகளுக்காகவும் பரிசில்களையும் பதக்கங்களையும் வழங்கலாம் ;

(ண) நூலகங்களையும் ஆய்கூடங்களையும் நிறுவலாம், அவற்றுக்கு உபகரண வசதிகளை அமைக்கலாம், அவற்றைப் பேணலாம் என்பதுடன், அடிப்படைக் கற்கைகளுக்காகவும் உயர்நிலைக் கற்கைகளுக்காகவும் வேறு சேவைகளையும் ஏற்பாடுசெய்யலாம் ;

(எ) அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம், பயிற்சி, பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, நடத்தை, லீவு வழங்கல் என்பன உட்பட, அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் தொடர்பிலான விதிகளை ஆக்கலாம் ;

(ஏ) நிறுவகத்தின் பொது நிருவாகம் தொடர்பிலான விதிகளை ஆக்கலாம் ;

(ஐ) நிறுவகத்தினால் ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக கட்டணங்களை அல்லது இறுப்பனவுகளை விதிக்கலாம் ;

(ஒ) நிறுவகத்துக்கு ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக கட்டணங்களை அல்லது இறுப்பனவுகளைச் செலுத்தலாம் ;

(ஓ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமான அல்லது உசிதமான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்யலாம்.

நிறுவகமானது அமைச்சரினது பணிப்புகளின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல்.

6. நிறுவகமானது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும், அரசாங்கத்தின் கொள்கைக்கும் அத்தகைய கொள்கை தொடர்பில் அமைச்சரினால் வழங்கப்படும் ஏதேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

ஆளுநர் சபை.

7. (1) நிறுவகத்தினது அலுவல்களின் முகாமையும் நிருவாகமும் ஆளுநர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் ' சபை ' எனக் குறிப்பீடுசெய்யப்படும்.)

(2) சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அமைச்சரின் அபிப்பிராயப்படி அச்சுத்தொழில் தொழினுட்பத் துறையில் அல்லது முகாமைத்துறையில் முனைப்பாக ஈடுபட்டுள்ளவர்களான அமைச்சரால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள் ; (இவர்கள் இதனகத்துப்பின்னர் 'நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்' எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) ;

(ஆ) (இதனகத்துப்பின்னர் 'பதவிவழி உறுப்பினர்கள்' எனக் குறிப்பிடுசெய்யப்படும்) பின்வரும் பதவிகளை அப்போதைக்கு வகிக்கின்றவர்களாக இருக்கவேண்டிய வேறு நான்கு உறுப்பினர்கள் :—

(i) அரசாங்க அச்சாளர் ;

(ii) அரச அச்சுத்தொழிற் கூட்டுத்தாபனத் தவிசாளர் ;

(iii) அகில இலங்கை அச்சுத்தொழிலாளர் சங்கத் தலைவர் ;

(iv) இலங்கை பொதியடைத்தல் நிறுவகத் தலைவர்.

உறுப்பாண்மையிலிருந்து தகைமையற்றவராதல்.

8. ஆளொருவர்—

(அ) அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது வந்தால் ; அல்லது

(ஆ) அச்சுத்தொழில் தொழினுட்பத்தில் அல்லது முகாமையில் அறிவை போதிப்பதற்கென நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்தின் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தவிர்ந்த, ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதேனும் உரிமையை அல்லது நலனை அவர் வைத்திருந்தால் அல்லது துய்த்தால் ; அல்லது

(இ) சபையின் உறுப்பினர் ஒருவர் என்ற முறையில் அவரது பணிகள் அவரால் ஆற்றப்படுவதனைப் பங்கமாகப் பாதிக்கக்கூடிய ஏதேனும் அத்தகைய நிதிசார் அல்லது வேறு அக்கறையை அவர் உடையவராயிருந்தால்,

சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு உறுப்பினராகத் தொடர்ந்திருந்துவருவதற்கு தகைமையுடையவராதலாகாது.

சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களது பதவிக்காலம்.

9. (1) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்பினால், பதவிவிலகுவதனால் அல்லது அகற்றப்படுவதனால் தமது பதவியை முன்னதாகவே வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டுகளைக் கொண்ட வொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) (அ) அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமெனக் கருதினால், அதற்கான காரணம் எதுவும் குறித்தொதுக்காது, நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம் ;

(ஆ) பந்தி (அ) என்பதன்கீழ் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றியமை நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதல் ஆகாது.

(3) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் எந்நேரத்திலும் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட அப்பயன்படவுள்ள கடிதமூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறந்தால் அல்லது பதவியிலிருந்து விலகினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால், அமைச்சர், 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்துட்கொண்டு, இறந்த, பதவிவிலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட உறுப்பினரின் இடத்துக்கு உறுப்பினராக இருக்கவென வேறொராளை நியமிக்கலாம்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டுள்ளவரான உறுப்பினர் ஒருவர் அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(6) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, உடற்பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, அமைச்சர், 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்துட்கொண்டு, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறொராளை நியமிக்கலாம்.

(7) பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலமல்லாது வேறுவகையாக பதவியை வறிதாக்குகின்ற சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

10. அமைச்சர் சபையின் உறுப்பினர்களுள் ஒருவரைச் சபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும். சபையின் தவிசாளர்.

11. சபையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கும் காரணத்தினால் மட்டும் அல்லது சபையின் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கும் காரணத்தினால் மட்டும் நிறுவகத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது. நிறுவகத்தின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் எவையும் ஏதேனும் வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்திலுள்ள குறைபாடு காரணமாக செல்லுபடியற்றதாகக் கருதப்படமாட்டாது.

12. சபையின் உறுப்பினர்களுக்கு சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும். சபை உறுப்பினர்களின் ஊதியம்.

13. நிறுவகத்தின் இலச்சினை— நிறுவகத்தின் இலச்சினை.

(அ) சபையின் தவிசாளரது கட்டுக்காப்பில் இருத்தல்வேண்டும்;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடன் தவிரவும் சபையின் இரண்டு உறுப்பினர்களின் சமுகத்திலன்றியும் ஆவணம் எதற்கும் பொறிக்கப்படுதலாகாது. அவ்விரு உறுப்பினர்களும் அங்கு சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அந்த ஆவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்.

14. (1) சபையின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்திலும் குறைந்தது ஒரு தடவையேனும் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) தவிசாளர் சபையின் ஒவ்வொரு கூட்டம் பற்றியும் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஆகக்குறைந்தது எழு நாள் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கூட்டத்தில் கையாளப்படவுள்ள அலுவல் பற்றி அத்தகைய அறிவித்தலில் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், சபையின் இரண்டு உறுப்பினர்களினால் சபையின் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டும்படி எழுத்தில் வேண்டப்பட்டால் தன்பின்னர் எழு நாட்களுக்குள்ளாக தவிசாளர் அவ்வாறு சபையின் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(4) சபையின் கூட்டம் எதிலும் ஐந்து உறுப்பினர்கள் கூட்ட நடப்பெண்ணைக அமைதல் வேண்டும்.

(5) சபைத் தவிசாளர் தாம் சமுகமாயிருக்கும் சபையின் கூட்டமொவ்வொன்றிலும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் எக்கூட்டத்திலும் தவிசாளர் சமுகமாயிராதவிடத்து, சமுகமாயிருக்கும் உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்படும் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குதல் வேண்டும்.

(6) சபையின் கூட்டமொன்றில் முடிபுசெய்யப்படவுள்ள ஏதேனும் கருமத்தின்மீது அல்லது காரியத்தின்மீது வாக்குகள் சரிசமமாக இருக்கின்றவிடத்து, அத்தகைய கூட்டத்தின் தவிசாளர் தமது சொந்த வாக்குடன் அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக சபையானது சபையின் கூட்டம் தொடர்பிலானதும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பிலுமான நடைமுறைக்கை முறைக்காக விதிகளை ஆக்கலாம்.

சபையின் தத்துவங்களையும் கடமைகளையும் கையளித்தல்.

15. (1) சபையானது அதன் தத்துவங்களுள், பணிகளுள் அத்துடன் கடமைகளுள் எதனையும் தவிசாளருக்கு அல்லது நிறுவகத்தின் பதிவாளருக்கு கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்தத் தவிசாளருக்கு அல்லது பதிவாளருக்கு சபையின் எவையேனும் தத்துவங்கள், பணிகள் அத்துடன் கடமைகள் கையளிக்கப்பட்டனவோ அந்தத் தவிசாளர் அல்லது பதிவாளர் அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் சபையின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைவாக பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது புரிதல் வேண்டும்.

16. இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது பின்வரும் தத்துவங்களை, பணிகளை அல்லது கடமைகளைப் பிரயோகித்தல், நிறைவேற்றல் அத்துடன் புரிதல் வேண்டும் :— சபையின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும்.

(அ) நிறுவகத்தின் நிருவாகத்துக்கான நிதிகளைத் திரட்டுதல், அத்துடன் நிறுவகத்தின் தொழிற்பாட்டுக்கென உள்ளூர் மற்றும் வெளியூர் ஒழுங்கமைப்புகளிலிருந்தும் முகவர் நிலையங்களிலிருந்தும் நிதி உதவி பெறுதல் ;

(ஆ) சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக அல்லது வசதிகளுக்காக கட்டணங்களை விதித்தல் ;

(இ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா வழிவகைகளையும் எடுத்தல் ;

(ஈ) சபையின் அலுவல்களினது நிருவாகம் தொடர்பில் விதிகளை ஆக்குதல்.

## பாகம் II

## நிறுவகத்தின் பதிவாளரையும் நிறுவகத்தின் ஏனைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்

17. (1) சபையானது நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு (இதனகத்துப்பின்னர் "பதிவாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிறுவகத்தின் பதிவாளர் ஒருவரை நியமிக்கலாம். இவர் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும். நிறுவகத்தின் பதிவாளரை நியமித்தல்.

(2) பதிவாளர், அவருக்குக் கையளிக்கப்படக்கூடிய அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பதிவாளரை சபையானது பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) பதிவாளரின் ஊதியம் உட்பட, அவரது தொழில் நிபந்தனைகள் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

18. (1) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது— நிறுவகப் பணியாட்டொகுதியினரை நியமித்தல் தொடர்பாக சபைக்குள்ள தத்துவங்கள்.

(அ) நிறுவகத்தின் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம் ;

(ஆ) நிறுவக பணியாட்டொகுதியினரை விலக்கலாம், அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் ;

(இ) பணியாட்டொகுதியினரின் வேதனங்களை, சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம் ;

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதி, நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(உ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் நலனுக்காக சகாய நிதியங்களையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம்; அத்துடன் அத்தகைய ஏதேனும் நிதியத்திற்கு அல்லது திட்டத்திற்கு உதவுதொகைகளை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பிடுசெய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பாக விதிகள் ஆக்கப்படலாம்.

கடமைகளைத் தீர்மானித்தல்.

19. பதிவாளர், சபையின் அங்கீகாரத்துடன், நிறுவகத்தினது அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் கடமைகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

20. (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையால் நிர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அந்த அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அந்த அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும், அத்தகைய கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபையினதும் சம்மதத்துடன், அக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபையினாலும் சபையின் உறுப்பினர்களினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) குறித்துரைக்கப்பட்டதொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவை புரிவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ள எவரேனும் ஆளை நிறுவகமானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அந்த ஆளினால் நிறுவகத்துக்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக் காலப் பகுதி, அத்தகைய ஒப்பந்தத்துக்கான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப் படுதல் வேண்டும்.

## பாகம் III

## நிதி

21. (1) நிறுவகம் அதன் சொந்த நிதியத்தினை வைத்திருந்து பேணி வருதல் வேண்டும். நிறுவகத்தின் நிதியம்.

(2) நிறுவகத்தின் நிதியத்திற்குப் பின்வருவன வரவுவைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தினைத் தாபிப்பதுடன் சம்பந்தப்பட்டவாறான அத்தகைய ஒழுங்கமைப்புகளினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) நிறுவகம் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் பணிகளை நிறைவேற்றுவதிலும் கடமைகளைப் புரிவதிலும் நிறுவகத்தினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) இலங்கைக்கு உள்ளேயிருந்தோ அல்லது இலங்கைக்கு வெளியே இருந்தோ எத்தகையதுமான மூலங்களிலிருந்தேனும் வருமானம், கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக நிறுவகத்தினால் பெறப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) நிறுவகத்தின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் நிறுவகத்தினால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவையான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

22. நிறுவகமானது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டா சிறைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் செல்வ வரியைக் கொடுப்பனவு செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். செல்வ வரிக் கொடுப்பனவிலிருந்து நிறுவகம் விலக்களிக்கப்படுதல்.

23. சபையினது தொழிலின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத நிறுவகத்தின் எவையேனும் நிதிகள் அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் சபையினால் முதலீடு செய்யப்படலாம். நிறுவகத்தின் நிதிகளை முதலீடு செய்தல்.

நிதியத்தின் பணங்களை மீளப்பெறுதலும் முதலீடு செய்தலும்.

**24.** நிறுவகத்தின் நிதியத்திலிருந்து எவையேனும் பணங்களை மீளப் பெறும், அத்துடன் நிதியத்தின் எவையேனும் பணங்களை முதலீடுசெய்யும் விதமும் முறையும் அந்நோக்கத்துக்கென காலத்துக்குக் காலம் ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளுக்கிணங்க சபையினால் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதிகளுக்கிணங்கவல்லாது பணத்தொகை எதுவும் மீளப்பெறப்படலுமாகாது.

சபையின் நிதி ஆண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

**25.** (1) நிறுவகத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) சபையானது சபையின் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள், அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்தல் தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிறுவகத்தின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

நிறுவகத்தின் உறுப்பினர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் **கருதப்படுதல்.**

**26.** நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிறுவகமானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

**27.** நிறுவகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் **வேண்டும்.**

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.